**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 2024–2025–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 12–ஆம் வகுப்பு மாணவ மாணவியர் NEET, JEE போன்ற நுழைவுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற ஏதுவாக வினா–விடை வங்கி நூல்கள் வாங்கி வழங்க நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்**
**சிறுபான்மையினர் நல(சிந2)த்துறை**

அரசாணை (நிலை) எண்.85 நாள் 07.10.2024

திருவள்ளுவராண்டு 2055
புரட்டாசித் திங்கள் 21–ஆம் நாள்

படிக்கப்பட்டது:

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண்.DBC/120/2024–B2, நாள் 04.07.2024, 10.07.2024 மற்றும் 23.07.2024.

*****

**ஆணை:**

2024–2025–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

"பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல பள்ளி விடுதிகளில் 12–ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்கள் எதிர்வரும் காலங்களில் NEET, JEE போன்ற நுழைவுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற ஏதுவாக வினா–விடை வங்கி நூல்கள் 22 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்".

2) மேற்படி அறிவிப்பினை செயற்படுத்தும் விதமாக பெறப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடிதங்களில், கடந்த 2023–24–ஆம் கல்வியாண்டு முதல் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளி விடுதிகளில் 12–ஆம் வகுப்பு மாணவ / மாணவியர் NEET மற்றும் JEE போன்ற உயர்கல்விக்கான நுழைவுத் தேர்வுகளுக்குப் பயின்று தேர்ச்சி பெற ஏதுவாக வினா வங்கி (விடைகளுடன் கூடிய) புத்தகங்கள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

Padasalai.Net

அதேபோன்று, நடப்பு 2024-25-ஆம் கல்வியாண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 1042 பள்ளி விடுதிகளில் தங்கி 12-ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர் எதிர்வரும் காலங்களில் தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு - இளநிலை மருத்துவம் (National Eligiblity cum Entrance Test - NEET) மற்றும் ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வு (Joint Entrance Exam - JEE) ஆகிய தேர்வுகளை சிறப்பாக கையாளும் பொருட்டு விடுதிகளுக்கு வினா விடை நூல்களை வழங்கலாம் என தெரிவித்துள்ளார்.

3. மேலும், NEET மற்றும் JEE நுழைவுத் தேர்வுகளுக்கான வினா விடை புத்தகங்களின் உள்ளடக்கமானது (Content) ஆதிதிராவிடர் நலத் துறையால் நியமிக்கப்படும் ஆசிரியர் தேர்வுக்குழு மூலம் பெறப்பட்டு, தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998, விதிகள் 2000-ஐப் பின்பற்றி குறைந்த விலைப்புள்ளிகள் அளிக்கும் அச்சகம் (Printing Press) மூலம் அச்சிடப்படும் என்றும் தெரிவித்துள்ளார். எனவே, இத்திட்டத்தினைச் செயற்படுத்த ஏதுவாக ரூ.21,84,000/-ஐ உரிய கணக்குத் தலைப்புகளில் நிதி ஒதுக்கீடு செய்தும் மற்றும் இத்திட்டத்தினை தொடர் திட்டமாக (Ongoing scheme) செயல்படுத்த அனுமதி வழங்கியும் உரிய அரசாணை பிறப்பித்திடுமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்கண்ட சூழ்நிலையில், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்து, 1042 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கி 12-ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர் பயன்பெறும் வகையில் NEET மற்றும் JEE நுழைவுத் தேர்வுகளுக்கான வினா விடைப் புத்தகங்களை, விடுதி ஒன்றிற்கு 10 புத்தகங்கள் வீதம் (5 NEET + 5 JEE) அச்சிட்டு வழங்க அனுமதியும், அதற்கான செலவினமாக இணைப்பில் காணும் விவரப்படி ரூ.21,84,000/- (ரூபாய் இருபத்தொரு இலட்சத்து எண்பத்து நான்கு ஆயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் மற்றும் இத்திட்டத்தினை தொடர் திட்டமாக (Ongoing scheme) செயல்படுத்த அனுமதியும் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்புகளின்கீழ் பற்றுவைக்கப்படவேண்டும்:

<u>பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் (ரூ.12,26,000/-) (563 விடுதிகள்)</u>

(புத்தகங்களுக்கான தொகை-ரூ.11,26,000/- + போக்குவரத்து
செலவினம்- ரூ1,00,000/-)

"2225 - ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 03 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 277 - கல்வி - மாநிலச் செலவினங்கள் - AA - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள் - 334 - ஏனைய செலவுகள் - 02 - நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள், குறித்த காலவெளியீடுகள் வாங்குதல்"

(IFHRMS DPC 2225-03-277-AA-33402)

Padasalai.Net

<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்</u> (ரூ. 6,84,000/-) (342 விடுதிகள்)

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – மாநிலச் செலவினங்கள் – BC – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள் – 334 – ஏனைய செலவுகள் – 02 – நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள், குறித்த காலவெளியீடுகள் வாங்குதல்"

(IFHRMS DPC 2225-03-277-BC-33402)

<u>சீர்மரபினர் நல விடுதிகள் (ரூ.2,66,000/-)</u> (133 விடுதிகள்)

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 80 – பொது – 101 – சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் – மாநிலச் செலவினங்கள் – AF – சீர்மரபினர் மாணவர் இல்லங்களும் உணவு இல்லங்களும் – 334 – ஏனைய செலவுகள் – 02 – நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள், குறித்த காலவெளியீடுகள் வாங்குதல்"

(IFHRMS DPC 2225-80-101-AF-33402)

<u>சிறுபான்மையினர் நல விடுதிகள் (ரூ.8,000/-) (4 விடுதிகள்)</u>

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 04 – சிறுபான்மையினர் நலன் – 277 – கல்வி – மாநிலச் செலவினங்கள் – JB – சிறுபான்மையினர் மாணவரில்லங்கள் – 334 – ஏனைய செலவுகள் – 02 – நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள், குறித்த காலவெளியீடுகள் வாங்குதல்"

(IFHRMS DPC 2225-04-277-JB-33402)

6. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.21,84,000/-, 2024-2025-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2024-2025-ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்தை 2024-2025-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது உரிய நேரத்தில் நிதி [பி, மிபி (ம) சிந / வ.செ.பொ.1] துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

Padasalai.Net

7. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். (eOffice Note # 63) 7777704 / நிதி (பி, மிபி (ம) சிந) / 2024, நாள் 04.10.2024-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1033 (ஆயிரத்து முப்பத்து மூன்று) (IFHRMS ASL No.2024101033)

(ஆளுநரின் ஆணைப்படி)

சா.விஜயராஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர்,
பிற்படுத்தப்பட்டோர் நலன்,
சென்னை – 600 005.
ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சீர்மரபினர் நலன்,
சென்னை – 600 005.
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலன்,
சென்னை – 600 005.
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 008.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை – 600 009.
<u>நகல்</u>
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடுவாழ் தமிழர் நலன்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
நிதி (பி, மிபி (ம) சிந / வ.செ.பொ.I / வ.செ.பொ.II / வ.வ.I)த் துறை,
சென்னை – 600 009.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் (பிந3) துறை, சென்னை – 600 009.
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதுநிலை முதன்மை தனிச்செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் துறை, சென்னை – 600 009.
அரசு கூடுதல் செயலாளர் அவர்களின்
முதுநிலை நேர்முக எழுத்தர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் துறை, சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

Padasalai.Net

## இணைப்பு

**அரசாணை (நிலை) எண்.85, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 07.10.2024**

| வ. எண் | இயக்ககம் | மொத்த பள்ளி விடுதிகளின் எண்ணிக்கை | ஒரு விடுதிக்கு வழங்கப்படும் NEET/JEE புத்தகங்களின் எண்ணிக்கை (1 விடுதிக்கு – 5 NEET + 5 JEE புத்தகங்கள்) | ஒரு புத்தகத்தின் விலை (அனைத்து வரிகள் உட்பட) (ரூ) | மொத்த செலவினம் (அனைத்து வரிகள் உட்பட) (ரூ) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | (6=3x4x5) |
| 1 | பிற்படுத்தப்பட்டோர் நலன் | 563 | 10 | 200 | 11,26,000 |
| 2 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன் | 342 | 10 | 200 | 6,84,000 |
| 3 | சீர்மரபினர் நலன் | 133 | 10 | 200 | 2,66,000 |
| 4 | சிறுபான்மையினர் நலன் | 4 | 10 | 200 | 8,000 |
| | மொத்தம் | 1042 | | | 20,84,000 |
| | போக்குவரத்து செலவினம் | | | | 1,00,000 |
| | பெரு மொத்தம் | | | | 21,84,000 |
| | (ரூபாய் இருபத்தொரு இலட்சத்து எண்பத்து நான்கு ஆயிரம் மட்டும்) | | | | |

சா. விஜயராஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

Padasalai.Net